
Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

20.05.2020 புதன்கிழமை



# ஜூன் 20 தேர்தல் நடக்காது!

உயர்நீதிமன்றுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் மற்றும் உறுப்பினர் அறிவிப்பு

கொழும்பு, மே 20

நாடு தற்போதுள்ள நிலைமையில் திட்டமிட்டபடி ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்கான சத்தியங்கள் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

2



## போர் வெற்றி விழா பொருத்தமற்றது!

### கோத்தா தரப்புக்கு சூடு வைத்த மங்கள

கொழும்பு, மே 20

போரிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு மீண்டுமொரு போர் ஏற்படாமல் இருக்கும் வகையிலேயே நாம் செயற்பட வேண்டும். மாறாக போர் வெற்றியைக் கொண்டாடுவது பொருத்த

2

## கோத்தாவின் கொக்கரிப்பு நாட்டுக்கு நல்லதல்ல

### சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

இலங்கைக்கு அழுத்தம் கொடுத்தால் சர்வதேச அமைப்புக்களின் நிறுவ னங்களின் உறுப்புரிமையிலிருந்த இலங்கை விலகும் என்ற ஜனா திபதி கோத்தா பய ராஜபக் ஷவின் அறிவிப்பு ஒரு போதும் நாட்டுக்கு நல்லதல்ல.

2

சர்வதேச அமைப்புகளில் இருந்து

## விலகிட வேண்டாம் விளக்குக நியாயத்தை!

### கோத்தாவுக்கு முட்டு கொடுக்கிறது சஜித் அணி

கொழும்பு, மே 20

சர்வதேச அமைப்புகளிலிருந்து விலகுவதென்பது நாட்டை பின்நோக்கியே அழைத்துச் செல்லும். அத்தகைய அமைப்புகளுடன் பேச்சு நடத்தி தனது தரப்பு நியாயத்தை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின்

2

## மின் கம்பம் நட்டவரை மின்சாரம் தாக்கியது!

### ஆபத்தான நிலையில் மருத்துவமனையில்!


யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி உப்புமடத்தடிப் பகுதியில் உயர் அழுத்த மின் தாக்கியதில் உடல் முழுவதும் எரிந்த நிலையில்

2




## புதினம் தெரியுமோ?



நல்லாட்சிக் காலத்தில இல்லாமல் போன போர் வெற்றிக் கொண்டாட்டம் திரும்பவும் இந்த வருசம் தொடங்கிட்டு. சனமெல்லாம் கொரோ னாப் பயத்தில இருக்கேக்க, நாடு எக்கேடு கெட்டால் நமக்கென்ன ? எண்ட நினைப்போட பிரமாண்ட விழாவை அரசே ஏற்பாடு செய்து நடத்திச்சு. முகக் கவசம் போடாட்டி சிறைக்கும்போக வேண்டிவரும் எண்டு ஊருக்கே உபதேசம் செய்து போட்டு, நாட்டின்ர ஜனாதிபதியே முகக்கவசம் போடாமல் வந்த கூத்தும் இந்த வெற்றிவிழாவில நடந்திச்சு. நாங்கள் இப்ப கதைக்கப்போறது அந்த விழா எப்பிடி நடந்தது எண்டில்லை. வெற்றிவிழாச் சம்பந்தமா உமுன்னணி

2

ஜனாதிபதி கோத்தாபயவின்

## தேர்தலுக்கான பேச்சால் நாட்டுக்கே பெரும் பாதிப்பு

### சந்தர்ப்பத்தை தமிழர்கள் சரியாக பயன்படுத்தவேண்டும் என்கிறார் மாவை.

யாழ்ப்பாணம், மே 20

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்காக, சிங்கள, பௌத்த இனவாதத்தின் உச்சத்தில் நின்று ஆற்றியிருக்கும் கோத்தாபய ராஜபக் ஷவின் உரையால், நாட்டுக்கே மிகப் பெரிய பாதிப்பு ஏற்படப் போகின்றது. இந்த உரையால் தமிழ் மக்களுக்கு

2A

## பாதிப்பு இலங்கைக்கே!

### கூறுகிறார் சுரேஷ் பிரேமசந்திரன்

யாழ்ப்பாணம், மே 20

இலங்கை அரசு சர்வதேச அமைப்புக்கள், நிறுவனங்களிலிருந்து விலகினால், அந்த அமைப்புக்கள் நிறுவனங்க ளுக்கு எந்தப் பாதிப்பும் வராது. சகல பாதிப்புக்களும் இலங்கைக்குத்தான். இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான க.சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்தார். படைவீரர்கள் தின விழா ஜனாதிபதி கோத்தாபய தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றிய கோத்தாபய, படையினருக்கு அழுத்தம் கொடுத்தால் சர்வதேச அமைப்புகளில் இருந்து இலங்கை விலகும்

2

## 11 வருடமாக தனிமைச் சிறை: அரசியல்கைதியை விடுவிக்குக!

### சட்டத்தரணி கே.வி.தவராசா வாதம்

கொழும்பு, மே 20

பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக் காவல் உத்தரவுக்கு அமைவாக மகர தடுப்பு முகாமில் கடந்த 11 ஆண்டுகளாக தனிமையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரேயொரு அரசியல் கைதியான கனகரத்தினம் ஆதித்தனை விடுவிக்க

2A



சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# போர் வெற்றி...

மான நடவடிக்கையாக அமையாது என்று முன்னாள் அமைச்சர் மங்கள சமர வீர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்ட தையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். போர் முடிவடைந்த பின்னர் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்று மூவின மக்களையும் ஐக்கி யப்படுத்தியிருக்கவேண்டும். இதனைச் செய்யாமல் இனவாத ஆட்சியையே அன்றைய வெற்றியாளர்கள் முன்னெடுத்த னர். ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் தற்போது மீண்டும் வந்து, இனங்களுக்கி டையில் முரண்பாடுகளைத் தோற்றுவித் துவருகின்றனர். ஆக, இது கொண்டாடக் கூடியதொரு வெற்றி அல்ல.
இலங்கையில் நடைபெற்றது உள்நாட்டுப் போராகும். இரு தரப்புகளிலும் இலங்கை யர்களே கொல்லப்பட்டனர். இராணுவத் தினரும் எமது பிள்ளைகள். அதேபோல் பிரபாகரனின் அழுத்தத்துக்கு அடிப ணிந்து, ஏமாந்து வடக்கில் உயிரிழந்த இளையோரும் இலங்கையர்கள். எனவே, போரில் இருந்து பாடத்தைக் கற்றுக் கொண்டு, இந்த நாட்டில் மீண்டுமொரு முறை போர் ஏற்படாமல் இருக்கும் வகையில் செயற்படவேண்டிய தருணம் இது - என்றார். (ஒ,5,44)

# புதினம் தெரியுமோ?

**'கார்ப்பரேட்' கொம்பனிகள் செய்த வேலையைப் பற்றித்தான். ஒண்டு போன் அடிச்சால் வீட்டுக்கே 'இத்தாலி சாப் பாட்டுச் சாமான் ' ஒண்டைக் கொண்டந்து தாற கொம்பனி. அந்தச் சாப்பாட்டுக் கடைக்காரர், போர் வெற் றிக்கு பெருமையடையிற தாச் சொல்லி ஆமிக்காரரை வாழ்த்தி விளம்பர ஒண்டைத் தங்கட பேஸ்புக்கில போட்டிச்சினம். போன வருசம் , இதே மாதிரி தமிழில் பேசக்கூடாது' எண்டு போர்ட் வைச்சு, கொழும்பு ரெஸ்ரோரண்ட் ஒண்டு வாங்கி கட்டின கதையை ஆரோ ,இந்த இத்தாலிச் சாப்பாட்டுக் கடைக்காரருக்கு சொல்லியிருக்க வேணும். கொஞ்ச நேரத்தி லேயே அதைத் தங்கட பேஸ்புக்கில இருந்து தூக்கிட்டினம்.**
**மற்றக் கொம்பனிகள் ஆரெண்டு பார்த்தால் போன் கொம்பனிகள். நேற்று ஆருக்குப் போன் பண்ணினாலும் போர் வெற்றி சம்பந்தமான சிங்களப் பாட்டு ஒண்டு 'கோலர் ரியூன்' கேட்டுக்கொண்டே இருந்திச்சு. உடன போன் கொம்பனிய ளுக்கு எடுத்துக் கதைச் சால், எங்க ளுக்கு தெரியாது. இதெல்லாம் தொலைத் தொடர்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழு தான் செய்யினம். அதை நிப்பாட்ட எங்க ளால முடியாது எண்டு பதில் வருகுது. அப்பிடியெண்டா கன வாடிக்கை யாளர் காசு கட்டி, 'கோலர் ரியூனை' வைச் சிருக் கினம், அவைக்கு அந்தக் காசை போன் கொம்பனியள் திருப்பிக் குடுக்குமோ?**
**அதைவிட வாடிக்கையாளரின் கருத் தைக் கேட்காமல் இப்பிடி கோலர் ரியூனை போடுறது, வாடிக்கையாளர்களின் தனிமனித உரி மையை மீறும் செயல்.**
**வாடிக்கையாளர் ஒண்டும் இலவசமா போன் கதைக்கேலை, சிம் தொடக்கம் டேட்டா வரைக்கும் எல்லாத்துக்கும் காசை வாரியி றைச்சுத்தான் பயன்படுத்துகினம். அப்பிடி காசு தந்து பாவிக்கிற வாடிக்கையாளரின் விருப்பத்துக்கு மாறாக ஒரு கோலர் ரியூனை, அவையின்ர அனுமதிகூட இல்லாமல், போடுறது எவ்வளவு பெரிய பிழை எண்டு தெரியுமோ? அதுசரி, தெரிஞ்சால் இப்பிடி போட்டிருக்க மாட்டினம் தானே.**

**– பட்சி**

# ஜூன் 20...

ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்த திகதி குறிப்பிட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பை சவாலுக்குட்படுத் தும் அடிப்படை உரிமை மனுக்கள் உயர் நீதிமன்றால் இன்று மூன்றாவது நாளாக பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன.
பிரதம நீதியரசர் தலைமையிலான 5 நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு இந்த மனுக்களை கடந்த திங்கட்கிழமை பரி சீலனைக்கு எடுத்தன. தேர்தல்கள் ஆணைக்குழு தனது நிலைப் பாட்டை உயர் நீதிமன்றுக்கு இன்று அறிவித்துள்ளது.
சுகாதாரத் துறையினர் கொரோனா தொற்று அபாயம் நீங்கிய தாக அறிவித்த பின்னர் தேர்தலை நடத்துவதற்கான பணிகளை முன்னெடுக்க 9 தொடக்கம் 11 வாரங்கள் தேர்தல் ஆணைக்குழு வுக்குத் தேவைப்படும். ஊரடங்குச் சட்டம் மற்றும் சுகாதாரக் கட்டுப்பாடுகளால் மனிதவள வேலை நேரமும் குறைவடை கின்றது. எனவேதான் அரசமைப்பு சம்பந்தப்பட்ட இந்த விட யம் தொடர்பில் உயர் நீதிமன்றின் ஆலோசனையைப் பெறுமாறு ஜனாதிபதியின் செயலரிடம் தேர்தல் ஆணைக்குழு கேட்டிருந்தது. உயர் நீதிமன்றின் ஆலோசனையைப் பெற ஜனாதிபதி விரும்ப வில்லை என்று ஜனாதிபதியின் செயலரால் தேர்தல் ஆணைக்கு ழுவுக்கு பதிலளிக்கப்பட்டது. அரசால் அறிவிக்கப்பட்டபடி ஏப்ரல் 27ஆம் திகதிக்குள் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு நீக்கப்படும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்த திகதி நிர்ணயிக்கப்பட் டது. இன்று மே 20 ஆம் திகதியைத் தாண்டியும் நாடுமுழுவதும் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படவில்லை. 23 மாவட்டங்களில் இன்னும் இரவு ஊரடங்கு உத்தரவு உள்ளது. இரண்டு மாவட்டங்க ளில் முழுநாள் ஊரடங்கு உத்தரவு இன்னும் நடைமுறையில் உள்ளது. பொதுவாக தேர்தல் தயாரிப்பு பணிகளில் ஈடுபடும் அதிகாரிகள் 16 தொடக்கம் 18 மணி நேரம் கடமையில் இருப் பார்கள். இப்போது 10 அல்லது 12 மணித்தியாலங்களுக்கு மேல் செய்ய முடியாது, என்று தேர்தல் ஆணைக்குழுவின் சார்பில் முன்னி லையான ஜனாதிபதி சட்டத்தரணி சலியா பீரிஸ் சமர்ப்பணம் செய்தார். இதேவேளை, தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, மார்ச் 17ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதிவரை பொது விடுமுறையாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் அன்றைய தினங்களில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் செல்லுபடியற்றவை, என்று சமர்ப்பணம் செய்தார். (ஒ,5)

# பாதிப்பு இலங்கைக்கே...

என்று தெரிவித்த கருத்துத் தொடர்பில் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமசந்திரன் மேலும் தெரிவித்தா வது:
இறுதிக் கட்டபோரில் பல லட்சம் பேர் உயிரிழந்திருந்தனர். ஐ.நா. சபைக்கும் இது தெரியும். இது தெரிந்தமையால்தான் இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா. ஆராய்ந்திருந்தது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டி ருந்தன. இலங்கையின் ஜனாதிபதி என்ன சொன்னாலும் நடந்து முடிந்த போரில் மனிதப் படுகொலைகள் இடம்பெற்றன. அதை மறுக்க முடியாது. அவற்றுக்குப் பொறுப்புக் கூறுவதற்குப் பதிலாக, பொறுப்புக் கூறலை வலியுறுத்தும் சர்வதேச அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து விலகப்போவதாக இலங்கை கூறுகின்றது. அவ்வாறு விலகுவதால் இலங்கைக்குத்தான் இழப்பு ஏற்படும். இலங்கை போன்ற சிறிய நாடு ஐ.நா. அமைப்பிலிருந்து விலகுவதாக எடுத்துக்கொ ண்டால், ஐ.நா. அமைப்புக்கு எந்தப் பாதிப்பும் வராது. இலங்கைக்குத்தான் பாதிப்புவரும். ஜனாதிபதி கோத்தாபய வீராப்புப் பேசலாம். ஆனால் உலக நியமங்கள், நடப்புக்களை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொள்ளத் தவறினால் அதற்கான விலையையும் அவர்களே கொடுத்தாகவேண்டி ஏற்படும். ஜனாதிபதி என்கின்ற பொறுப்பான பதவியிலிருப்பவர் தான் என்ன பேசுகின்றேன் என்பதைப் புரிந்து கொண்டு பேசினால் நல்லது - என்றார். (ஒ,5)

# கோத்தாவின்...

அதுவும் கொரோனா பாதிப்பில் நாடு தத்தளித்துக் கொண்டிருக்கையில் இப்படியான கொக்கரிப்புக்கள் நாட்டை மேலும் மோசமான நிலைமைக்கே கொண்டு செல்லும். இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் தெரிவித்தார்.
படைவீரர்கள்தின விழா ஜனாதிபதி கோத்தாபய தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றிய கோத்தாபய, எம்மைப் போன்ற ஒரு சிறிய நாட்டில் அர்ப்பணிப்புகளைச் செய்துள்ள படைவீரர்கள் தேவையற்ற அழுத்தங்களுக்கு உள்ளாக நான் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை. எமது நாட்டுக்கு அநீதியான வகையில் ஏதேனும் ஒரு சர்வதேச நிறுவனம் அல்லது அமைப்பு தொடர்ந்தும் செயற்படுமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் அல்லது அமைப்பின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை விலக்கிக்கொள்ள நான் ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை என்று குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கருத்துத் தொடர் பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் மேலும் தெரிவித்ததாவது:
நாடு கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியாக பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளோம்.
இவ்வாறான சூழலில் வெளிநாடுகளையோ அல்லது சர்வதேச அமைப்புக்களையோ பகைப்பது நல்லதல்ல. அவர்களை எந்த விடயத்துக்காக பகைத்தாலும் விளைவு நாட்டுக்குத்தான். தமிழ் மக்கள் விடயத்தில் சர்வதேச சமூகம் நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக பாடுபடுகின்றது. அவர்கள் அந்த அக்கறையை தொடர்ந்தும் வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் எமது விருப்பம். இலங்கை இவ்வாறு விலகுமாக இருந்தால் அது எமக்குச் சிறிய பின்னடை வைத்தரும். ஆனாலும் நாம் விரைவில் அதிலிருந்து மீண்டுவிடுவோம்- என்றார். (ஒ,5)

# விலகிட வேண்டாம்..

உறுப்பினரும், முன்னாள் சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியல்ல 'உதயனிடம்' தெரி வித்தார்.
இராணுவத்தையும், நாட்டையும் தொடர்ச்சி யாக இலக்கு வைக்கும் சர்வதேச அமைப்புகள் அல்லது நிறுவனங்களிலிருந்து வெளியேறுவ தற்கு தயங்கப்போவதில்லை என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சர்வதேச அமைப்பு, நிறுவனங்களின் கொள்கைக் கோட்பாடுகளை ஏற்று, அதன் சட்டத்திட்டங்க ளுக்கமையவே இலங்கை உறுப்புரிமை பெற்றி ருக்கின்றது. மாறாக அத்தகைய அமைப்புகளில் வெறுமனே இணையமுடியாது. எனவே, சட்ட திட்டங்களை நிச்சயம் பிற்பற்றவேண்டும்.
ஐக்கிய நாடுகள் சபையில்கூட இலங்கை அங்கம் வகிக்கின்றது. இந்த நிலையில் அழுத்தங்கள் தொடர்ந்தால் சர்வதேச அமைப்புகளில் இருந்து விலகக்கூட பின்நிற்கப்போவதில்லை என்று அறி விப்பு விடுப்பது ஏற்புடைய நடவடிக்கை அல்ல.
அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சர்வதேச அமைப் பொன்று குற்றச்சாட்டு முன்வைக்கும்பட்சத்தில் உரிய விளக்கத்தை வழங்கி தமது தரப்பு நியா யத்தை எடுத்துரைக்கவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது நாம் இதனை செய் தோம்.
சர்வதேச ஒத்துழைப்பின்றி எம்மால் செயற்பட முடியாது. அவ்வாறு செயற்பட்டால் நாடு தனிமைப்படுத்தப்படும் அபாயம் உருவாகும். அதன்மூலம் நாடு பின்நோக்கியே பயணிக்க வேண்டிவரும் என்றார். (ஒ,5,44)

# மின் கம்பம்....

ஒருவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார். இன்று காலை இந்தச்சம்ப வம் இடம்பெற்றது.
ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வெளிவேலைகளை பகுதியளவாக மேற் கொள்ளும் 'சீரா' நிறுவனத்தினர் இன்று காலை காங்கேசன்துறை வீதி உப்புமடத்த டியில் வீதியோரமாக கம்பம் நடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். குழி தோண்டப்பட்ட நிலையில் பாரம் தூக்கி (கிரேன்) ஊடாக கம்பத்தை நடுவதற்கு முற்பட்டுள்ளனர்.
இதன்போது அங்கிருந்த உயர் அழுத்த மின்சாரம் கடத்தப்படும் கம்பியில் ,கம்பம் முட்டுப்பட்டதால் பாரம்தூக்கும் இயந்திரத்துக்கு மின் கடத்தப்பட்டு பாரம்தூக்கியை இயக்கிக்கொண்டிருந்த வரை மின்சாரம் தாக்கியுள்ளது. அதனால் உடல் எரிந்த நிலையில் தூக்கி வீசப்பட்ட அவர், சிகிச்சைக்காக யாழ்ப்பாணம்போ தனா மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார்.
குறித்த கம்பம் நடும் பணிகள் உரிய முறையில் மின்சார சபைக்கு அறிவிக்கா மல் மேற்கொள்ளப்பட்டதாலேயே குறித்த சம்பவம் நடந்துள்ளதாக மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர். (த20)

# தேர்தலுக்கான...

கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்துவோம். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ. சேனாதிராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராசா மேலும் தெரிவித்ததாவது: ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின்போது கோத்தாபய ராஜபக்ஷ தனிச் சிங்கள வாக்குகளைக் குறிவைத்துச் செயற்பட்டார். பௌத்த சிங்கள இனவாதத்தைக் கக்கினார். பௌத்த சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். இந்த நாட்டில் இனப்பிரச்சினை இருக்கின்றது அதற்கு தீர்வு காணவேண்டும் என்ற எந்த எண்ணமும் அவருக்கு இல்லை. அப்படிப்பட்டவர் தான் நாடாளுமன்றத் தேர்தலை இலக்காகக்கொண்டு அடுத்த தீவிரவாத, பேரினவாதத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

இறுதிப் போரில் இடம்பெற்ற விடயங்களுக்கான பொறுப்புக் கூறலை கனேடியப் பிரதமர் முதல் கொண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர்கள் வரையில் வலியுறுத்தி வருகின்றனர். இந்தச் சூழலில் அவற்றை உதாசீனம் செய்து, உதறித்தள்ளி ஜனாதிபதி கோத்தாபய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச அமைப்புக்களிலிருந்து நிறுவனங்களிலிருந்து வெளியேறுவோம் என்று அவர் விடுத்துள்ள எச்சரிக்கை இலங்கைக்குத்தான் ஆபத்தானது.

கொரோனா நிலைமையில் இலங்கைக்கு கிடைக்கும் உதவிகளையும் அது பாதிக்கும். பொருளாதார ரீதியில் நாடு ஏற்கனவே பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது. இப்படியான சூழலில் இலங்கை சர்வதேச அமைப்புக்களிலிருந்து வெளியேறுவது இலங்கைக்குத்தான் ஆபத்தானது.

இலங்கையின் இந்த அறிவிப்பை தமிழர்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும். இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பை இலங்கை அரசு உதாசீனம் செய்யும் போது, சர்வதேச சமூகத்தை தமிழர்கள் பற்றிப் பிடிக்க வேண்டும். எமது மண்ணில் நாங்களே ஆளும் நிலைமையை உருவாக்குவதற்கு, சர்வதேசத்தின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு இது பொருத்தமான தருணம். எமது நியாயப்பாடுகளை சர்வதேசம் மீண்டும் ஒருமுறை உணர்ந்து கொள்வதற்கும் இது வாய்ப்பாக அமையும், என்றார். (ஓ,5)

# 11 வருடமாக தனிமை...

வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா மன்றில் வாதம் முன்வைத்துள்ளார்.

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் பஷார்அலி மொகமட்டை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14ஆம் திகதி நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் இராணுப் பாதுகாப்புப் பிரிவை சேர்ந்த ஏழு இராணுவ அதிகாரிகளுக்கு உயிரிழப்பை ஏற்படுத்தியுடன் மேலும் பத்து பொதுமக்களுக்கு கடும் காயத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு கனகரத்தினம் ஆதித்தன் மற்றும் இருவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் மேலதிக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது அரச சட்டத்தரணி இந்த வழக்கின் மேலதிக விசாரணைக்கு ஐப்பசி மாதத்தின் பின்னர் திகதியொன்றை நிர்ணயிக்கும்படி நீதிமன்றை வேண்டிக் கொண்ட பொழுது அரச தரப்பின் வேண்டுகோளுக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்த ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசா தனது வாதத்தில் 91 அரசியல் கைதிகளில் 90 அரசியல் கைதிகள் நீதிமன்றக் கட்டுப்பாட்டின் கீழ் நாட்டிலுள்ள பல சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஆனால் எதிரியான கனகரத்தினம் ஆதித்தன் பாதுகாப்பு அமைச்சரின் தடுப்புக்காவல் உத்தரவுக்கு அமைய மகர தடுப்பு முகாமில் கடந்த 11 வருடங்களாக தனிமையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரேயொரு அரசியல் கைதியாவார்.

இந்த வழக்கின் எதிரியான கனகரத்தினம் ஆதித்தனுக்கு எதிராக ஒரேயொரு குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டமா அதிபரால் யாழ்ப்பாணத்தில் ஒரு வழக்கும் கொழும்பு மேல் நீதிமன்றுக்கு இரு வழக்குமாக மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ, இராணுத்தளபதி சரத் பொன்சேகா ஆகியோரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக தாக்கல் செய்யட்ட வழக்கு உட்பட இரு வழக்குகளில் எதிரியாகிய கனகரத்தினம் ஆதித்தன் விடுதலை செய்யப்பட்ட நிலையில் இவ்வழக்கிலும் எதிரியினால் சுயவிருப்பத்தில் வழங்கப்பட்டதாக முக்கிய சான்றாக அரச தரப்பால் முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சுயமாகப் பெறப்பட்டதா என்பதற்கான உண்மை விளம்பல் விசாரணையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக எதிரியால் வழங்கப்படவில்லையென நீதிமன்றம் நிராகரித்துள்ளதனாலும் மேலும் கடந்த 10 ஆண்டுகளாக நடைபெறுகின்ற விசாரணையில் அரச தரப்பால் கனகரத்தினம் ஆதித்தனுக்கு எதிராக வேறு சான்றுகளும் அரச தரப்பால் முன்வைக்கப் பட வில்லையென்பதனையும் நீதிமன்றம் கவனத்தில் கொள்வதோடு நாட்டிலுள்ள கைதிகளில் தனிமைப்படுத்தப்பட்டு மகர தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு கைதியான ஆதித்தனை விடுதலை செய்யும்படி ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா வாதத்தை முன்வைத்தார்.

அரச தரப்பினதும் எதிரி தரப்பினாலும் முன்வைக்கப்பட்ட வாத பிரதிவாதங்களையடுத்து மேலதிக விசாரணைக்காக மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டிஆராச்சி மிகக் குறுகிய காலமாக ஆடி மாதம் 16ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். (ஓ,5)

## தனிமைப்படுத்தல் விவகாரம்

# பேராசிரியர் ஹூலுக்கு ஆணைக்குழு நெருக்குதல்!

யாழ்ப்பாணம், மே 20

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலுக்கு தொடர்ச்சியாக பல்வேறு தரப்புக்களாலும் அழுத்தங்கள், நெருக்குதல்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆகப் பிந்தியதாக அவரைத் தனிமைப்படுத்த வேண்டும் என்று தேர்தல்கள் திணைக்கள ஊழியர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

லண்டனிலிருந்து வந்த ஹூலின் மகள் தனிமைப்படுத்தல் முடிவடைந்தன, கொரோனா தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார். அவரை அழைத்துச் சென்றமைக்காகவே ஹூலைத் தனிமைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர், ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவின் சில நிலைப்பாடுகளுடன் முரண்பட்டிருந்தார். தேர்தல் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதிகள் பொதுவிடுமுறை என்பதால் மீளவும் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று ஹூல் வலியுறுத்தியிருந்தமை முரண்பாட்டுக்கு அடிப்படையாக அமைந்த காரணங்களில் ஒன்றாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் ஹூல் பக்கச் சார்பாக செயற்படுவதாக பகிரங்கமாகத் தெரிவித்திருந்தனர். ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணியின் பொதுச் செயலர், இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற நிலைமை இருக்கையில் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட ஹூல் எப்படி ஆணைக்குழு உறுப்பினராக இருக்க முடியும் என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த அழுத்தங்களின் பின்னணியில் புதியதொரு அழுத்தம் தேர்தல்கள் திணைக்கள ஊழியர்களால் எழுப்பப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் ஹூலின் மகள் லண்டனில் கல்வி கற்று வருகின்றார். அவர் கடந்த 3ஆம் திகதி லண்டனிலிருந்து அழைத்து வரப்பட்ட மாணவர் குழுவில் வந்திருந்தார். நாடு திரும்புவதற்கான ஒரு வழிக் கட்டணமாக 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலுத்தியிருந்தார். நாடு திரும்பிய பின்னர் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். கொழும்பிலுள்ள நட்சத்திர விடுதியில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலுத்தி தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

தனிமைப்படுத்தல் முடிந்த பின்னர் கொரோனாத் தொற்றுக்குரிய சோதனையை எதிர்கொண்டிருந்தார். கொரோனா தொற்று இல்லை என்ற பரிசோதனை முடிவு கிடைத்தது. இதன் பின்னர் சுகாதாரப் பணிப்பாளர் அனில் ஜாசிங்க மற்றும் கொரோனா தடுப்புச் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா இருவரின் ஒப்பத்துடன், தனிமைப்படுத்தல் முடிவடைந்தமைக்கான சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.

தனிமைப்படுத்தல் முடிவடைந்த பின்னர், தனது மகளை ஆணைக்குழு உறுப்பினர் ஹூல் அழைத்துக் கொண்டு, தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலகத்துக்குச் சென்றிருந்தார். இதன்போது அவரை அழைத்துச் சென்ற சாரதி, அவருக்கு தேநீர் வழங்கிய அலுவலக உதவியாளர் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர் ஹூல் ஆகியோரை 14 நாள்கள் தனிமைப்படுத்த வேண்டும் என்று தேர்தல்கள் திணைக்கள ஊழியர்கள் பலரும் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து ஆணைக்குழு உறுப்பினர் தனது மகளுடன், அங்கிருந்து வெளியேறியுள்ளார். இதே வேளை, தனிமைப்படுத்தல் முடித்தமைக்கான மகளின் சான்றிதழை பேராசிரியர் ஹூல், தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் ஒப்படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ,5,105)

## இடர் வலயங்கள் தவிர்ந்த ஏனைய

# மாகாணங்களுக்கு இடையில் பேருந்துச் சேவை ஆரம்பம்

கொழும்பு, மே 20

அதிக அவதானம் மற்றும் இடர் வலயங்களாக அடையாளம் காணப்பட்ட பகுதிகள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பொதுப் போக்குவரத்தானது அரச மற்றும் தனியார்துறை சார்ந்த பணியாளர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்துச் சேவை அதிகாரிகளுடன் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் எந்தவொரு நபருக்கும் முற்கூட்டிய அனுமதி வழங்காமல் பணிக்குச் செல்வதற்காக வருகை தரும் பயணிகளுக்கு முன்னுரிமை வழங்குமாறும் அவர் தெரிவித்தார். (ப)

# கடலட்டை கடத்தல்; நால்வர் கைது

## வாகனங்களும் பறிப்பு

கொழும்பு, மே 20

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் இரண்டு படகுகள் மூலம் கடலட்டைகளை கடல் வழியாகக் கொண்டு வந்து பாலக்குடா சந்தியில் வைத்து வாகனத்தில் ஏற்றுவதற்கு முற்பட்டவேளை நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்றுக் காலை குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 763 கிலோகிராம் கடலட்டைகள் கைப்பற்றப்பட்டதுடன் கடத்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட 2 படகுகள் மற்றும் சொகுசு வான் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் கடலட்டைகளை சொகுசு வாகனமொன்றின் மூலம் கொழும்புக்கு கடத்திச் செல்ல முற்பட்டனர் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. தொடர்ந்தும் கற்பிட்டிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப)

# 96 வயது மூதாட்டி குணமடைந்தார்

கொழும்பு, மே 20

கொரோனாத் தொற்று ஏற்பட்டதாக இலங்கையில் அடையாளம் காணப்பட்ட வயது முதிர்ந்த பெண்ணான பேருவளையைச் சேர்ந்தவர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்.

அங்கொடை தொற்றுநோய்ச் சிகிச்சை மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நிலையிலேயே 96 வயதான அந்தப் பெண் நேற்று செவ்வாய்க்கிழமை வீடு திரும்பியுள்ளார் என்று அங்கொடை தேசிய தொற்றுநோய் தடுப்பு மருத்துவமனையின் விசேட உடற்கூற்று மருத்துவ நிபுணர் தமயந்தி இடம்பிட்டிய தெரிவித்தார். (ப)

# வெளிநாடுகளுடனான உறவு அவசியமானதே

## கரு ஜயசூரிய வலியுறுத்து

கொழும்பு, மே 20

தற்போதைய நெருக்கடி நிலையில் வெளிநாடுகளுடனான உறவை வலுப்படுத்துவது அவசியமாகும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக உலக நாடுகள் பலவற்றினதும் செயற்பாடுகள் முடங்கியிருக்கின்றன. தற்போது காணப்படும் நெருக்கடி நிலையில் வெளிநாடுகளுடனான உறவை வலுப்படுத்துவது அவசியமாகும். அது மாத்திரமன்றி முதலீடுகளை ஊக்குவித்தல், வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் ஏனைய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தல் ஆகியவற்றிலும் அவதானம் செலுத்தவேண்டும். இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு பொருத்தமான அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும் என்றும் முன்னாள் சபாநாயகர் தெரிவித்துள்ளார். (ப)

# வீதி விபத்தில் சிறுமி காயம்

சாவகச்சேரி, மே 20

மோட்டார் சைக்கிள் விபத்தில் 17 வயது சிறுமி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை மீசாலையில் இடம்பெற்றது. (ஐ-9)

# எந்தக் காரணத்துக்காகவும் நாடாளுமன்று கூட்டப்படாது

## முன்னாள் எம்.பி டிலான் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, மே 20

அங்கீகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை வலுவற்றதாக்கவே எதிர்த்தரப்பினர் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்ட நீதிமன்றத்தை நாடியுள்ளார்கள். எந்தக் காரணங்களுக்காகவும் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் கூட்டப்படாது. ஐ.ஓ.சி. நிறுவனத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களை மக்கள் புறக்கணிக்கவேண்டும்.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் இவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் பங்காளிக் கட்சிகள் அரசியல் ரீதியில் பலவீனமடைந்துள்ளார்கள். இதன் காரணமாகவே தற்போது அரசாங்கத்துக்கு எதிராக ஒன்றிணைந்து செயற்படுகின்றார்கள். எதிர்த் தரப்பினர் பொதுத்தேர்தலுக்காக சமர்ப்பித்த வேட்புமனுவில் பெரும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் முரண்பாடே இம்முறை பொதுத் தேர்தலில் அவர்களுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். இதன் காரணமாகவே அங்கீகரிக்கப்பட்ட வேட்புமனுவை வலுவற்றதாக்க எதிர்த் தரப்பினர் நீதிமன்றத்தை நாடியுள்ளார்கள்.



ஐ.ஓ.சி நிறுவனம் முறையற்ற விதத்தில் தற்போது எரிபொருளின் விலையை அதிகரித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், இந்தியாவின் ஐ.ஓ.சி. நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையில் இந்த நிறுவனம் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுத்தது. தற்போது எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதற்கு அரசாங்கத்தால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கமுடியாது. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இன்று எமக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஐ.ஓ.சி நிறுவனத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதை முழுமையாகப் புறக்கணிக்கவேண்டும் - என்றார். (ப)

# மீன்பிடி துறைமுகங்களில் தகவல் பரிமாற்ற சேவை

கொழும்பு, மே 20

இலங்கையில் தற்போது செயற்பாட்டிலுள்ள 22 மீன்பிடித் துறைமுகங்களிலும் 24 மணி நேர தகவல் பரிமாற்ற சேவையை அமுல்படுத்துமாறு கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சரால், கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் திணைக்கள அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கடலில் தொழிலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர்கள் தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்ளும் வகையில் மீன்பிடித் துறைமுகங்களில் தகவல் பரிமாற்ற நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையங்களில் ஒரு சில நிலையங்களில் 24 மணிநேர சேவையை வழங்குகின்றபோதிலும், மேலும் சில நிலையங்களில் நாளாந்தம் 24 மணிநேரமும் தொடர்ந்து சேவையாற்றக் கூடிய நிலையில் இருக்கவில்லை.

இந்த நிலையில், அனைத்து தகவல் பரிமாற்ற நிலையங்களும் தினமும் 24 மணி நேரமும் சேவையை வழங்கவேண்டுமெனவும், அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

இதேவேளை புத்தளம், தொடுவாவ பகுதியில் கடல் கொந்தளிப்பு காரணமாக ஏற்பட்டுள்ள கடலரிப்பைத் தடுப்பதற்கு, உடன் நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதற்கமைவாக அந்த மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து கருங்கற்களைப் பயன்படுத்தி, கடலரிப்பைத் தடுக்கும் வகையில் அணை கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க-6)

# குடமுருட்டி பாலத்தின் பாகங்கள் திருட்டு

கொடிகாமம், மே 20

கிளிநொச்சி- பரந்தன்- பூநகரி வீதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பராமரிப்பில் உள்ள குடமுருட்டி இரும்பு பாலத்தின் பாகங்கள் இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

பிரதான போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் பரந்தன் - பூநகரி வீதியில் உள்ள குடமுருட்டி இரும்புப்பாலம் பல மில்லியன் பெறுமதியான இரும்புபாகங்களால் பொருத்தப்பட்டு, மக்கள் பாவனைக்காக நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்த இரவு வேளையில் மிகவும் நுட்பமான முறையில் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் சி.எம்.மொரைஷ் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ-159)

# கொரோனா பரவியதற்கு அரசாங்கமே பொறுப்பு!



## ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 20

கொரோனா வைரஸ் நாட்டுக்குள் பரவியமை தொடர்பில் அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என்று தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க , இது போன்ற நெருக்கடி நிலைமைகளில் கிடைக்கும் நிதி உதவிகளை கொள்ளையிடும் குணம் படைத்த ராஜபக்சக்களுக்கு இனி மீண்டும் நிதி மோசடிகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்க மாட்டோம் என்றும் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டிருக்கும் எம் நாட்டுக்குள் கொரோனோ வைரஸ் தொற்றைப் பரவுவதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தமை தொடர்பில் அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும். வைரஸ் பரவலைத் தடுக்கும் நோக்கில் உலக நாடுகள் விமான நிலையங்களை மூடியபோது, எமது நாட்டில் பெரும் தொகையான பணத்தைச் செலவிட்டு சுற்றுலாப்பயணிகளை நாட்டுக்குள் வரவழைப்பதற்காக, கொரோனாவுக்கான தீர்மானம் இலங்கை என்பதைக் காண்பிக்கும் வகையில் காணொலியை வெளியிட்டனர். அதன் விளைவாகவே இன்று கொரோனாவினால் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். கொரோனாவை அரசியல் செயற்பாட்டுக்கு எதிர்தரப்பினர் பயன்படுத்துவதாக ஆளும் தரப்பு எம்மீது குற்றம் சுமத்தி வருகின்றது. எமக்கு அவ்வாறான எண்ணம் கிடையாது.

ஜனநாயக நாடொன்றில் மக்களை காப்பதற்கான ஆட்சிமுறை இடம்பெறுகின்றதா? மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றதா? என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கவே மக்கள் பிரதிநிதிகள் தெரிவுச் செய்யப்படுகின்றனர். அதற்கமைய அரசாங்கம் எவ்வாறு செயற்படுகின்றது என்பது தொடர்பில் விமர்சனங்களை முன்னெடுக்கவே எதிர்க்கட்சி நியமிக்கப்படுகின்றது. எதிர்கட்சியின் செயற்பாடுகளையே நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். சுனாமிக்குப் பின்னர் இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற நிதி உதவிகளை ஒழுங்கான முறையில் பயன்படுத்தியிருந்தால், அதுவே இலங்கை மீண்டெழுவதற்கு போதுமானதாக இருந்திருக்கும் என்று பலர் தெரிவித்திருந்தனர். இந்த நிதி மோசடிகளில் ஈடுபட்ட ராஜபக்சகளுக்கே மக்கள் மீண்டும் ஆதரவு வழங்கி ஆட்சிப் பொறுப்பைக் கையளித்துள்ளனர்.

இந்நிலையில் தற்போது கொரோனா தொற்றினால் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்கும் பல நாடுகள் உலக வங்கிகள் நிதிவுதவிகளை வழங்கி வருகின்றன. ஆனால் ஆளும் தரப்பு எந்தவித நிதியும் கிடைக்கவில்லை என்று கூறி வருகின்றது. மைத்திரி ரணில் ஆட்சியிருந்தால் கொரோனாவைக் கட்டுப்படுத்திருக்க முடியாது என்று கூறுவதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஏன் என்றால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே நாட்டின் எந்தக் குற்றச்சாட்டுகளுக்கும் உட்படாத சுகாதார அமைச்சராக செயற்பட்டவர். இதனால் அவர் இருந்திருந்தால் வைரஸ் பரவலை இதனையும் விட சிறப்பான முறையில் முகாமைத்துவம் செய்திருப்பார்- என்றார். (ப)

# கொரோனாவைத் தடுக்க
# கிராம மட்டங்களில் சுகாதாரக் குழுக்கள்

## மன்னார் பிரதேச செயலர் நடவடிக்கை

மன்னார், மே 20

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள போதும், நாம் தொடர்ந்து கொரோனா வைரஸ் தொற்று நோயிலிருந்து விடுபட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதற்காக கிராமிய மட்டத்தில் சுகாதார மேம்பாட்டு குழுக்களை அமைக்க வேண்டியுள்ளது என்று மன்னார் பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப் தெரிவித்தார்.

வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமைவாகவும், மன்னார் மாவட்டச் செயலரின் ஆலோசனையின் அடிப்படையிலும் பிரதேச மட்டத்தில் கொரோனா மற்றும் டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான மீளாய்வுக் கூட்டம் மன்னார் பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் மன்னார் பிரதேச செயலாளர் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா விடயத்தில் பலதரப்பட்டனரும் இணைந்து செயற்பட்டதன் விளைவாக மன்னார் மாவட்டம் தாக்கத்துக்கு உள்ளாகவில்லை. எனினும் சுகாதார துறையினருக்கும், மனித இனத்துக்கும் பெரும் அச்சுறுத்தலைக் கொடுக்கும்விதமாக கொரோனா தொற்று பரவலடைந்துள்ளது.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதால் தொற்று முற்றுமுழுதாக நீக்கப்பட்டதாக நாம் எண்ணிவிடக்கூடாது. நாம் தொடர்ந்து வைரஸ் தொற்று நோயிலிருந்து விடுபட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. சுகாதாரத் திணைக்களத்தின் அனுசரனையுடன் டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் ஒரு குழுவைச் செயல்படுத்தி டெங்கைக் கட்டுப்பாட்டுக்கள் வைத்திருந்தோம்.

தற்பொழுது இதையும் மீறி வைரஸ் தாக்கம் ஏற்பட்டுள்ளது. ஆகவே ஒவ்வொரு நோயுக்கும் ஒவ்வொரு குழுவை வைத்திருப்பதை விட சுகாதார மேம்பாட்டுக் குழுவை நாம் கிராமிய மட்டத்திலும் உருவாக்கி அவற்றைச் செயல்படும் விதத்தில் கவனம் செலுத்துவோம்.

இதற்கமைய கிராமிய பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் மேம்பாட்டு குழுக்கள் நிறுவப்பட இருப்பதால் நாம் இப்பொழுது பிரதேச மட்டத்துக்கான சுகாதார மேம்பாட்டுக் குழுவை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (சு-60)

# ராஜிதவின் கைதுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 20

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் கைதுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த ஆர்ப்பாட்டம் களுத்துறை பாலத்துக்கு மேல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளை வான் கடத்தல் பற்றி பேசிய ராஜித கைதுசெய்யப்பட்டமைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (ப)



# மோட்டார் திணைக்கள சேவைகளும் ஆரம்பம்

கொழும்பு, மே 20

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அதன் ஆணையாளர் சுமித் அலகக்கோன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதி கைவிடப்பட்ட இந்த சேவையானது ஒரு நாள் சேவையை தவிர ஏனைய சேவைகளை வழங்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே சேவையாளர்கள் கடமைக்கு சமூகமளிப்பதன் காரணமாக தொலைபேசி ஊடாக அழைப்பினை மேற்கொண்டு நேரம் மற்றும் திகதி ஆகியவற்றை முற்பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி 070 63 54 108 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நாரஹேன்பிட்டி மற்றும் வேரஹேர நிலையங்களிலிருந்து பொதுமக்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அந்த திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சுமித் அலகக்கோன் தெரிவித்தார். (ப)

# மாதா சொருபங்கள் மீது இரு இடங்களில் கல்வீச்சு

புத்தளம், மே 20



புத்தளம் மற்றும் பாலாவி ஆகிய பகுதிகளிலுள்ள மாதா சொரூபங்கள் மீது இனந்தெரியாதோரால் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதலினால் மாதா சொரூபங்கள் வைக்கப்பட்டிந்த கண்ணாடிக் கூண்டுப்பகுதி சேதமடைந்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவத்தையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த புத்தளம் பொலிஸார், நேற்றுச் செவ்வாய்க்கிழமை மோப்ப நாய்களின் உதவியுடன் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் சோதனைகளை முன்னெடுத்தனர். மேலதிக விசாரணைகளையும் அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (ப)

# தமிழருக்கு நீதி கிடைக்க ஒன்றிணைவு அவசியம்

## ஐ.நா. முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவிப்பு

கொழும்பு, மே 20

இலங்கையில் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் உரிமைகள் மீறப்பட்டுவரும் நிலையில், அவர்களுக்கான நீதியையும், இழப்பீட்டையும் பெற்றுக் கொடுப்பதை உறுதிசெய்வதற்கு சர்வதேச ரீதியில் நாமனைவரும் ஒன்றிணைய வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற போர் முடிவடைந்து 11 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், அவர் வெளியிட்டுள்ள காணொலி ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

இலங்கையில் கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போரின்போது உயிரிழந்தவர்களை நினைவுகூர்கிறேன். இந்த



நீண்டகாலப்போரில் சுமார் 146,000 இற்கும் அதிகமான தமிழர்கள் உயிரிழந்தார்கள். எனவே அவ்வாறு உயிரிழந்த தமிழர்களை இந்த நாளில் நினைவுகூரும் அதேவேளை, தொடர்ந்தும் நீதி, சுதந்திரம் மற்றும் இழப்பீடு ஆகிய வற்றை முன்னிறுத்திய அவர்களது போராட்டங்களால் கவரப்பட்டுள்ளோம். ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் இறுதிப் போரின்போது போர்க் குற்றங்கள் இடம்பெற்றதாகக் கூறப்பட்டாலும், இன்னமும் இதுகுறித்த முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. மாறாக சிறுவர் உட்பட எண்மரைப் படுகொலை செய்த குற்றத்துக்காக நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட ஒரு முன்னாள் சார்ஜன்டுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். இது நீதிக்குப் புறம்பானதாகும்.

இலங்கையில் இன்னமும் தமிழர்களின் உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்பட்டு வருகின்றன. படையினரால் கைப்பற்றப்பட்ட பொதுமக்களின் காணிகள் இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. இலங்கையின் தேசியகீதத்தை தமிழ்மொழியில் பாடுவது புறக்கணிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இன்னமும் 200 பேர் வரையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தொடர்ச்சியாகத் தமிழ் மக்களின் உரிமையில் மீறப்பட்டுவரும் நிலையில், அவர்களுக்கான நீதியையும், இழப்பீட்டையும் பெற்றுக்கொடுப்பதை உறுதிசெய்வதற்கு சர்வதேச ரீதியில் நாமனைவரும் ஒன்றிணையவேண்டும்- என்றுள்ளது. (ப)

# ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு காணி வழங்குமாறு கோரிக்கை

சாவகச்சேரி, மே 20

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் குழந்தைகள் மற்றும் கர்ப்பவதிகள் போன்றோருக்கு மாதாந்தம் கிளினிக் நடத்த ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ஒரு பரப்புக் காணியை வழங்கவேண்டும் என்று சாவகச்சேரி நகரசபையால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எமது மற்றும் எதிர்காலச் சந்ததியினரின் நலன் கருதி முதற்கட்டமாக இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்க காணி பெறவேண்டும் என்று சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வில் உறுப்பினர் க.கஜீதன் கோரிக்கை விடுத்தார்.

இதை ஏனைய உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டதால், பொதுத்தேவைக்குத் தாராள மனத்துடன் ஒரு பரப்புக் காணியை அன்பளிப்பாக வழங்க விரும்புவோர் சபையுடன் தொடர்பு கொள்ளுமாறும், காணி கிடைத்ததும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சுகாதாரத் திணைக்களத்தில் தொடர்புகொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி, நகரசபை எல்லைக்குட்பட்ட 11 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பிரதேசமாகும். இந்தப் பிரிவுகளில் இரண்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும், 7 குடும்ப நல சேவையாளர்களும் பணியாற்றுகின்றனர். காலம் காலமாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால், அரச கட்டடங்களிலும், சனசமூக நிலையக் கட்டடங்களிலும் மாதாந்தம், கிளினிக்குகளை நடத்தி வருகின்றனர். அண்மையில் நுணாவில் பகுதி சனசமூக நிலையக் கட்டடமொன்றில் இடம்பெற்ற கிளினிக் மழைபெய்து ஒழுகியதால் தடைப்பட்டுக் கர்ப்பவதிகள் வீடு சென்றுள்ளனர். இது எமக்கு பெரும் அவமானமாகும். மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்ற குறிக்கோளுடன் நாம் செயற்படுகின்றோம்.

இது தொடர்பாக சுகாதாரத்துறைத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டபோது, "சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்க நிதி ஒதுக்கீடுசெய்து தருவதாகவும், அதற்கான காணியை வழங்குமாறும் கேட்டிருந்தனர்" என்று உறுப்பினர் தனது உரையில் தெரிவித்திருந்தார். (க-9)

# சிரட்டை கைவினைத் தொழில்

## கொரோனா தொற்றால் பாதிப்பு

வவுனியா,மே 20

கொவிட் 19 இன் தாக்கம் காரணமாக, வவுனியாவில் சிரட்டைக் கைத்தொழிலாளர்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

வவுனியா, பூம்புகார் கிராமத்தில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றிடம் பெற்ற பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்டு 20 குடும்பங்கள் சிரட்டைக் கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வீட்டில் பயன்படுத்தப்படும் தேங்காயில் இருந்து பெறப்படும் கழிவுச் சிரட்டைகளைப் பயன்படுத்தி பூ, கடவுளர் உருவம், உண்டியல், இதயம் மற்றும் அலங்காரப் பொருள்களை உற்பத்தி செய்து வந்தனர். அதனை வவுனியா நகரில் விற்பனைசெய்து அந்த வருமானத்தின் மூலம் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தினர்.

ஆனால், தற்போது கொவிட்19 இன் தாக்கம் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம், சுற்றுலாப் பயணிகளின் வருகையின்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பொருள்களுக்கான கேள்வி குறைவடைந்துள்ளது. எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி தமது வாழ்வாதாரத்துக்கு உதவ வேண்டும் என்பதே அந்த மக்களின் கோரிக்கையாகவுள்ளது. (க-18)





இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையால் கிளிநொச்சி பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கிருமி தொற்றில் இருந்து பாதுகாக்கும் அங்கிகளும் உபகரணங்களும் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-222)

# குருவிக்காட்டில் கொட்டப்படும் கழிவுகளால் சூழல் மாசடைவு

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

சாவகச்சேரி, மே 20

சாவகச்சேரி, சரசாலை வடக்கில் உள்ள குருவிக்காடுப் பகுதியில் பெருமளவு கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் சூழல் மாசடைகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

குருவிக்காடுப் பகுதியில் நீண்டகாலமாக நீர்தேங்கி கண்டல் காடுகள் வளர்ந்துள்ளன. இந்த மரங்களில் வெளியூர் உள்ளூர் பறவைகள் தங்கி வருகின்றன. இந்தக் காட்டுப் பகுதியை பறவைகள் சரணாலயமாக மாற்ற வேண்டுமென மக்கள் மாகாண அரசிடம் கோரிக்கை விடுத்தனர்.

தற்போது இந்தக் காட்டுப் பகுதியில் வாகனங்களில் குப்பைகளைக் கொண்டு வந்து வீதியோரத்தில் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். கொட்டப்படும் கழிவுகளால் சரசாலையிலிருந்து துன்னாலை செல்லும் வீதியில் துர்நாற்றம் வீசுகின்றது என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

தொடர்ச்சியாக உக்கக்கூடிய, உக்காத பொருள்கள் கொட்டப்படுவதால் நீர் மாசடைந்து நீரில் வாழும் முதலைகள் மற்றும் மீன் இனங்கள் அழிவடைவதுடன் பறவைகளும் வேறு இடங்களுக்குச் செல்லும் நிலை ஏற்படும். அத்துடன் அங்கு வீசும் துர்நாற்றம் சூழலை மாசடையச் செய்வதுடன் அயலில் உள்ள குடும்பங்களின் சுகாதாரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-9)

# இலங்கையில் அடிப்படைவாத அச்சுறுத்தல் நடைபெறவில்லை

## கமால் குணரட்ன தெரிவிப்பு

கொழும்பு, மே 20

அடிப்படைவாத அச்சுறுத்தல் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் உண்மைக்குப் புறம்பான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இலங்கையில் அவ்வாறு அடிப்படைவாத அச்சுறுத்தல் காணப்படுவதாக புலனாய்வுத்துறையிலிருந்து எவ்வித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றபோதிலும் தேசிய பாதுகாப்புக்கான நடவடிக்கைகளும் கைவிடப்படவில்லை. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அரசாங்கத்தில் அனைத்துப் புலனாய்வுத்துறையினரும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதோடு சர்வதேச மற்றும் மேற்குலக ரீதியில் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் தொடர்பில் புலனாய்வுத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக புலனாய்வுத் துறை பலப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளை கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள செயற்திட்டங்களுக்கு இராணுவம் மற்றும் பொலிஸார் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளனர். கொரோனா வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கடற்படையினரில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான போதைப் பொருள் வியாபார நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்த போதே அவர்கள் இவ்வாறான அனர்த்தத்துக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. எவ்வாறிருப்பினும் தீவிரவாத செயற்பாடுகளைத் தடுப்பதற்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இராணுவம் மற்றும் பொலிஸ் அணைத்து சந்தர்ப்பத்திலும் தயாராகவே உள்ளது-என்றார். (ப)



# கொரோனா மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு மீளாய்வுக் கூட்டம்

மன்னார், மே 20

பிரதேச மட்டத்தில் கொரோனா மற்றும் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான மீளாய்வுக் கூட்டம் நானாட்டான் பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் அரச அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மேற்கொள்ள வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பாகவும், மக்கள் மத்தியில் மேற்கொள்ள வேண்டிய விழிப்புணர்வு தொடர்பாகவும், பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ரூபன் லெம்பேட்டால் கருத்துரை வழங்கப்பட்டது.

அத்துடன் பெய்துவரும் மழை காரணமாக டெங்கு நோய் பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பான விடயங்களும் கலந்தாலோசிக்கப்பட்டன.

நிகழ்வில் நானாட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், உதவி திட்டமிடல் பணிப்பாளர், பிராந்திய பொதுப் பரிசோதகர்கள் ஆகியோர் சமூக இடைவெளியைப் பேணி முகக் கவசங்கள் அணிந்து கூட்டத்தில் கலந்துகொண்டனர். (ஐ-56)

# இலங்கையிலுள்ள இந்தியரை அழைத்துச் செல்ல விமானம்!

கொழும்பு, மே 20

இலங்கையிலுள்ள இந்தியர்களை அழைத்துச் செல்வதற்காக விசேட எயார் இந்தியா விமானம் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து, உலகெங்கிலும் உள்ள இந்தியர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்காக 'வந்தே பாரத் மிஷன்' என்ற பெயரில் செயற்திட்டமொன்று இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக இலங்கையிலுள்ள இந்தியர்களை அழைத்துச் செல்வதற்காக விசேட எயார் இந்தியா விமானம் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

ஏற்கனவே இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தில் பதிவுசெய்து கொண்டவர்களில், மிக அவசிய தேவையுடையோருக்கு முன்னுரிமை அடிப்படையில் (கர்ப்பிணிப்பெண்கள், மாணவர்கள், காலவதியான விசா உரிமையாளர்கள், மருத்துவ சேவைக்கான தேவையுடையோர் உள்ளிட்ட மேலும் சில முக்கிய காரணங்களை உடையோர்) குறித்த விமானத்தில் இந்தியாவுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த விமானசேவை தொடர்பான விவரங்கள் மற்றும் இந்தியாவுக்குச் சென்றதன் பின்னரான தனிமைப்படுத்தல் வசதிகள் என்பன குறித்து தமது இணையத்தளப் பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்படுமென இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

அதேவேளை இன்னமும் தம்மைப் பதிவு செய்து கொள்ளாத இலங்கையில் உள்ள இந்தியர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளது. (ப)



நல்லூர் கந்தசுவாமி ஆலய மணவாளக்கோல உற்சவம் நேற்று மிக எளிமையாக நடைபெற்றது. நல்லூர் கந்தசுவாமி எழுந்தருளி வேலவனுக்கு காலை சங்காபிஷேகமும் குறிப்பிட்ட பக்தர்களுடன் நடைபெற்றது. மாலையில் சண்முகநாதப் பெருமானுக்கு சிறப்பு ஆராதனைகள் இடம்பெற்றது. சுவாமி உள்வீதியில் எழுந்தருளினார். (ஐ)



# சஜித்தின் ஜனாதிபதி ஆசையே ஐ.தே.க. பிளவடையக் காரணம்

## பெரமுனவின் உறுப்பினர் வீரகுமார கண்டுபிடிப்பு

கொழும்பு, மே 20

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக, மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவை எதிர்த்தரப்பினர் தெரிவு செய்வதே ஐக்கிய தேசியக் கட்சியின் பிளவுக்கான பிரதான காரணம். முரண்பாடுகளுக்கு மத்தியிலேயே இவர்கள் பொதுத்தேர்தலில் போட்டியிடுவார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொவிட்19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை எதிர்த்தரப்பினர் தங்களின் சுய அரசியல் தேவைகளை நிறைவேற்ற விமர்சிக்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை எதிர்த்தரப்பினர் நியமித்தமை தவறான செயற்பாடாகும். இதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சி தற்போது பிளவடைந்துள்ளது. 30 ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசியல் தேவைகளுக்காக இராணுவத்தினரை சர்வதேச மட்டத்தில் குற்றவாளியாக்கினார்கள். தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கியதன் காரணமாகவே மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். இந்த வெற்றி பொதுத்தேர்தல் ஊடாக மேலும் பலப்படுத்தப்படும்-என்றார். (ப)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 20.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.